தமிழ் வளர்ச்சித் துறை

அனுப்புநர்

திரு.செ.சரவணன், இ.ஆ.ப
தமிழ் வளர்ச்சி இயக்குநர், (மு.கூ.பொ)
தமிழ் வளர்ச்சி இயக்ககம்
தமிழ் வளர்ச்சி வளாகம் முதல் தளம்,
தமிழ்ச்சாலை, எழும்பூர்,
சென்னை-600 008.

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்,
முதன்மைக் கல்வி அலுவலகம்,
மாநில மகளிர் மேல்நிலைப்பள்ளி வளாகம்,
எழும்பூர்,
சென்னை-15.

திருவள்ளுவராண்டு 2053 / பிலவ / தை - 25
ந.க.எண். 399/2022/தவ, நாள் : 07.02.2022

ஐயா,

பொருள்: தமிழ் வளர்ச்சி – சென்னை மாவட்டத்தில் 2021-2022ஆம் ஆண்டிற்கு திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு – 1330 குறட்பாக்களையும் முற்றோதும் மாணவர்களுக்கு ரூ.10,000/- பரிசு - தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறுதல் - பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் - தொடர்பாக.

பார்வை: 29.11.2019 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்(தவ1.2)துறை அரசாணை (நிலை) எண் 161.

=====

இலக்கியங்கள் அனைத்திலும் சிறந்ததும் உன்னதமானதும் மனித குலம் அனைத்திற்குமாக உதித்த மேலானதும் ஆகிய தன்னிகரற்ற படைப்பு திருக்குறள். அத்தகைய சிறப்புமிக்க தெய்வமறை எனப்போற்றப்படும் அறக்கருத்துக்களடங்கிய திருக்குறட்பாக்களின் மாண்பை வருங்கால மாணவர்கள் இளம் வயதிலேயே மனப்பாடம் செய்தால் அவை பசுமரத்தாணிபோல் பதிந்து, நெஞ்சில் நிலைத்து அவர்களது வாழ்க்கைக்கு வழிகாட்டும். தாம் பெறுகின்ற கல்வியறிவோடு, அறநெறி ஆற்றலை தன்னகத்தே பெற்று நல்லொழுக்கம் மிக்கவர்களாக மாணவர்களை உருவாக்கிட வேண்டும் என்ற உன்னதமான நோக்கில் தமிழ்நாடு அரசு திருக்குறள் முற்றோதல் திட்டத்தை ஆண்டு தோறும் செயற்படுத்தி வருகிறது.

எனவே, திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவச் செல்வங்களுக்கு பரிசு வழங்கிப் பாராட்டுவது, மாணவர்களின் நல்வாழ்வுக்குத் துணை நிற்பதாகவும், திருக்குறள் நெறி வழிவகுப்பதாகவும் அமையும். 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் மாணவர்களுக்கு திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு ரூ.10,000/- பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி ஆண்டுதோறும் சிறப்பிக்கப்பெறுகின்றனர்.

அவ்வகையில், அரசு/அரசு உதவி பெறும் / தனியார் உள்ளிட்ட அனைத்து பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு திருக்குறள் முற்றோதல் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவது அவசியமாகிறது. எனவே, அரசு/அரசு உதவிபெறும்/தனியார் உள்ளிட்ட அனைத்து தொடக்க, உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளுக்கு 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் தகுதிப்பெற்ற மாணவர்களை மட்டும் இப்போட்டிக்கு விண்ணப்பிக்க சுற்றறிக்கை அனுப்பி விழிப்புணர்வினை ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். 2021 – 2022 ஆம் ஆண்டிற்கான திருக்குறள் முற்றோதல் போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவ, மாணவியர்கள் தமிழ் வளர்ச்சித் துறையின் www.tamilvalarchithurai.com என்ற வலைதள முகவரியில் விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்களை கீழ்காணும் முகவரிக்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அளிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 044 – 28190448, 044 – 28190412, 044 - 28190413 என்ற தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

<u>திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு பெறுவதற்கான விதிமுறைகள்</u>

- 1330 திருக்குறட்பாக்களையும் முழுமையாக ஒப்புவிக்கும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- இயல் எண், பெயர், அதிகாரம் எண், பெயர், குறள் எண், பெயர் போன்றவற்றை தெரிவித்தால் அதற்குரிய திருக்குறளைக் கூறும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

- திருக்குறளின் அடைமொழிகள், திருவள்ளுவரின் சிறப்புப்பெயர்கள், திருக்குறளின் சிறப்புகள் ஆகியவற்றை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.
- சென்னை மாவட்டத்தில் அமைந்துள்ள பள்ளியில் பயில்பவராக இருத்தல் வேண்டும். அரசு / அரசு உதவிபெறும் / தனியார் / பதின்மப் பள்ளிகள் போன்ற பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கு பெறலாம்.
- தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறும் இப்பரிசினை இதற்குமுன்னர் பெற்றவராக இருத்தல் கூடாது.
- திருக்குறளின் பொருளும் அறிந்திருப்பின் கூடுதல் தகுதியாகக் கருதப்பெறும்.

<u>விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முகவரி</u>

தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்,
(சென்னை மாவட்டம்)
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
தமிழ் வளர்ச்சி வளாகம், முதல் தளம்,
தமிழ்ச்சாலை, எழும்பூர்,
சென்னை-8.

தி.உ... 7/2/2022
தமிழ் வளர்ச்சி இயக்குநருக்காக

7.2.22

# திருக்குறள் முற்றோதல் பரிசுத் தொகை கோரும் விண்ணப்பம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மாணவரின் பெயர் | : | நிழற்படம் |
| 2. | பிறந்த நாள்/ வயது/ பாலினம் | : | |
| 3. | தந்தை /தாய்/பாதுகாவலர் பெயர் | : | |
| 4. | தற்போது பயிலும் கல்வி / வகுப்பு | : | |
| 5. | பயிலும் பள்ளி / கல்லூரி முகவரி / மாவட்டம் தொலைபேசி எண். | : | |
| 6. | நிலையான இல்ல முகவரி | : | |
| 7. | தொடர்பு முகவரி (வட்டம், மாவட்டம் அஞ்சல் குறியீட்டு எண். தொலைபேசி / செல்பேசி எண்ணுடன்) | : | |
| 8. | 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்பவரா ? ஆம் / இல்லை | : | |
| 9. | இதற்கு முன்னர் குறள் பரிசுத்தொகையாக திங்கள்தோறும் ரூ.1000/– வீதம் அல்லது ஒட்டுமொத்தத் தொகை ரூ.5000/–, ரூ.10,000/– பெறப்பட்டிருப்பின் அதுபற்றிய விவரம் (அரசாணை எண் / நாள்) | : | |
| 10. | தெரிவிக்க விரும்பும் பிற தகவல்கள் (தனியே இணைக்கப்படலாம்) | : | |
| 11. | பள்ளி / கல்லூரி படிப்புச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ள விவரம் | : | |

## உறுதிமொழி

திருக்குறள் முற்றோதல் செய்தமைக்குக் குறள் பரிசுத் தொகையாக திங்கள்தோறும் ரூ.1000/– வீதமோ அல்லது ஒட்டுமொத்தத் தொகையாகவோ இதற்கு முன்னர் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகப் பெறப்படவில்லை என உறுதி கூறுகிறேன்.

பெற்றோர் / பாதுகாவலரின் ஒப்பம்

மாணவரின் ஒப்பம்

படிப்புச் சான்று

செல்வி / செல்வன் -----------------------------------------------

என்பவர் இப்பள்ளியில் / இக்கல்லூரியில் -----------------------------------

வகுப்பு / பாடப்பிரிவில் பயின்று வருகிறார் என சான்றளிக்கப்படுகிறது.

அலுவலக வட்ட
முத்திரை

பள்ளித் தலைமை ஆசிரியர் /
கல்லூரி முதல்வர் ஒப்பம்